தெரியுமா? கன்னியாகுமரி மாவட்டத்தில் மணவாளக்குறிச்சிப் பகுதியில் இத்தகைய தொழிற்சாலை ஒன்றைத் தமிழக அரசு தொடங்குவதற்கான உத்தேசம் உள்ளதா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம்: தலைவர் அவர்களே, மணவாளக்குறிச்சியில் ரேர் எர்த்ஸ் கார்ப்பரேஷன் என்ற நிறுவனம் அங்கே கனிமம் எடுத்துக்கொண்டு வருவதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களும் அறிவார்கள். ஆகவே தமிழக் அரசுக்கு அப்படிப்பட்ட எண்ணம் தற்போது இல்லை.

தமிழகத்தில், கஞ்சமலையில் இரும்பு கனிமங்களை வெட்டி எடுத்தல்.

428—(* வினா எண். 10393)—திரு. எஸ். இராசாராமன்:— மாண்புமிகு தொழில் மற்றும் வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில் கஞ்சமலையில் உள்ள இரும்பு கனிமங்களை வெட்டி எடுக்க அனுமதி கோரி மாநில அரசு மைய அரசிடம் விண்ணப்பித்து உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விபரம் என்ன?

மாண்புமிகு திரு. க. இராசாராம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) இல்லை.

(ஆ) வினாவிற்கு இடமில்லை.

திரு. எஸ். இராசாராமன்: பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் பல்வேறிடங்களில் இதுபோன்ற கனிமங்கள் கிடைப்பதாகத் தெரிய வருகிறது. அதுபற்றித் தமிழக அரசு அறியுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம்: பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் இருக்கின்ற எல்லா கனிமங்களைப் பற்றியும் அரசு ஆய்ந்து அறிக்கை வைத்திருக்கிறது. அது எந்தக் கனிமம் என்று கேட்டால் அதுபற்றிய விவரங்களைத் தரத் தயார் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

1987 ஏப்ரல் 21]

திரு. கு. ரமணி: தலைவர் அவர்களே, சேலம் கஞ்சமலையில் இரும்புத் தாது இருப்பதை எடுத்து அங்கே ஒரு உருக்காலை ஏற்படுத்தவேண்டுமென்ற திட்டத்தைத் தமிழக அரசு பல வருஷங்களுக்கு முன்பே உருவாக்கியது. அது மத்திய அரசால் ஒப்புக்கொள்ளப்பட்ட திட்டம். உருக்காலை என்ற பெயரிலேயே கோப்புகள் எல்லாம் தயாரிக்கப்பட்டு இன்றைக்கு எவர்சில்வர், ஸ்டீல் போன்றவற்றை உற்பத்தி பண்ணக்கூடிய இடமாக மாற்றப் பட்டிருக்கிறது. அந்த மலையிலிருந்து கிடைக்கக் கூடிய இரும்பு தாதுக்களை வைத்து உண்மையிலேயே லாபகரமாக இரும்பு செய்ய முடியாதா, உருக்கு செய்ய முடியாதா? எதனால் இந்த நிலைமை ஏற்பட்டது? அதை அரசு தொடர்ந்து கவனித்து அங்கே உருக்காலை அமைவதற்கும், இரும்பு தாதுக்களை எடுப்பதற்கும் ஏற்பாடு ஏதேனும் உண்டா என்று அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 10-20)

மாண்புமிகு திரு. க. இராசாராம்: தலைவர் அவர்களே, ஏற்கெனவே இன்றைக்கு இருக்கிற துணை ஜனாதிபதி அவர்கள் தொழில் துறை அமைச்சராக இருந்தபோது, இரும்புத் தாது எல்லாம் எடுக்கப்பட்டு, ஸ்வீடன், ஜப்பான் நாடுகளுக்கெல்லாம் அனுப்பி இரும்பை எடுக்க முடியும் என்று அறிவித்து நாட்டுக்கு அறிக்கை எல்லாம் தந்திருக்கிறார்கள். அது குறித்து இந்த மன்றத்தில் பலமுறை விவாதிக்கப்பட்டிருக்கிறது. ஆனால் தற்போது இருக்கக்கூடிய சூழ்நிலையில் ஒரு எவர்சில்வர் பேக்டரிதான் அங்கே அமைந்திருக்கிறது. மீண்டும் அதை உருக்காலை ஆக மாற்றக் கூடிய முயற்சிகளை அரசு மேற்கொள்ளும்.

திரு. தி. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் வேறு எங்காவது இரும்புக்கனி வெட்டி எடுப்பதற்காக நம் அரசு மைய அரசினுடைய அனுமதியை

எதிர்நோக்கி உள்ளதா? வட ஆற்காடு மாவட்டம் திருவண்ணாமலையிலிருந்து வெட்டி எடுக்கும் பகுதியும் அதில் அடங்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம்: தலைவர் அவர்களே, சேலத்திலும் திருவண்ணாமலையிலும் இரும்பு இருக்கிறது என்பதை நாடு நன்கு அறியும். ஆனால் எடுக்கிற வாய்ப்புகள் இதுவரையில் கிட்டவில்லை.

டாக்டர் கே. பி. இராமலிங்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சேலம் கஞ்சமலையில் உருக்காலை துவக்கு வதற்காக மைய அரசு முதலிலே ஆணையிட்டு, அதன் விழாவில் இன்றைய தொழில் துறை அமைச்சர் அவர்கள், அன்றைய பாரதப் பிரதமர் இந்திரா காந்தி அம்மையார் அவர்களுக்கு தங்க மாங்கனி எல்லாம் வழங்கி வாழ்த்துக் கூறினார்கள். ஆனால் இன்றைக்கு அது உருக்காலையாக இல்லாமல் உருட்டாலையாக மட்டும்தான் மைய அரசு நடத்திக் கொண்டிருக்கிறது. எனவே அதை மாற்றி மைய அரசு எந்தத் திட்டத்திற்காக அந்த ஆலையைக் கொண்டு வந்ததோ, அந்தத் திட்டத்தை நிறை வேற்றுகின்ற வகையில் உருக்காலை துவக்க வேண்டும் என்று மாநில அரசு மைய அரசை கடிதம் எழுதி வற்புறுத்துமா என்று அறிய விரும்புகிறேன்.

சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

மாண்புமிகு திரு. க. இராசாராம்: நல்ல ஆலோசனை. ஏற்கலாம்.

திரு. டி. தீர்த்தகிரி கவுண்டர்: மாண்புமிகு சட்டப்பேரவைத் தலைவர் அவர்களே, தர்மபுரி மாவட்டம் தீர்த்தமலையில் இரும்புக் கனி இருப்பதாக ஜியாலஜிக்கல் சர்வே செய்து 37

1987 ஏப்ரல் 21]

சதவிதம் இரும்பு கிடைக்கலாம் என்று ஆராய்ச்சியும் செய்திருப்பதாக அறிகிறோம். அரசின் கவனத்திற்கும் இந்த தகவல் கிடைத்திருப்பதாக அறிகிறோம். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தர்மபுரி மாவட்டம், குறிப்பாக அரூர் வட்டம் தீர்த்த மலைப் பகுதி மிகவும் பின்தங்கிய பகுதியாக இருப்பதனால், அங்கே இரும்பு கனிமத்தை எடுப்பதற்கு தக்க நடவடிக்கை எடுப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம்: தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் டெல்லியிலே ஏற்கனவே இருந்தவர்கள். நன்றாக டெல்லியை அறிந்தவர்கள். அவர்கள் டெல்லிக்கு மீண்டும் போகும்போது எங்கள் சார்பாக அவர்களே கூட கேட்டால் நல்லது என்று நினைக்கிறேன். இரும்பு கஞ்ச மலையிலும் இருக்கிறது, தீர்த்த மலையிலும் இருக்கிறது, திருவண்ணாமலையிலும் இருக்கிறது. இரும்பு இல்லாத இடம் கிடையாது. தமிழகத்தில் நிறைய இரும்பு இருக்கிறது. அதை எடுப்பதற்கான அதிகாரம் டெல்லியிலே இருக்கிறது. ஆகவே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இதற்கு உதவுவார்களேயானால் அது பயன் உள்ளதாக இருக்கும்.

திரு. எ. எஸ். ஏ. ஆறுமுகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கஞ்ச மலையிலே உருக்காலை அமைப்பதற்கான விவரங்களைச் சரியாகச் சொல்லவில்லை. மத்திய சர்க்கார் அதற்கு ஒப்புதல் அளித்திருப்பதாகச் சொல்லுகிறார்கள். அதற்கு பண ஒதுக்கீடு இல்லையா? என்ன காரணத்தால் அதில் தடங்கல் ஏற்பட்டிருக்கிறது?

மாண்புமிகு திரு. க. இராசாராம்: தலைவர் அவர்களே, மத்திய சர்க்கார் முதலிலே இரும்பு ஆலைதான் துவக்க இருந்தார்கள். அதற்காகத்தான் அன்றைய பிரதமர் திருமதி இந்திரா காந்தி அம்மையார் அவர்கள் அடிக்கல் நாட்டவும் செய்தார்கள். ... கணக்கான மக்கள் கூடி இருந்து பார்த்தார்கள். அதற்குப்

பிறகு ஏற்பட்ட ஏதோ விளைவுகளின் காரணமாக இரும்பு ஆலை உருட்டு ஆலையாக மாறி ஓடிக் கொண்டிருக்கிறது. இரும்பு ஆலையாகத்தான் அது வரவேண்டும், அதற்கான முயற்சிகளை இந்த அரசு மேற்கொள்ளும் என்பதை மட்டும் நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

தென்னாற்காடு மாவட்டம், காட்டுமன்னார்கோவிலில் மல்லிகைப் பூவிலிருந்து சென்ட் தயாரிக்கும் தொழிற்சாலை.

429—(*வினா எண். 11136) **திரு. சா. ஜெயச்சந்திரன்:** மாண்புமிகு தொழில் மற்றும் வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தென்னாற்காடு மாவட்டம், காட்டுமன்னார்கோவில் பகுதியில் மல்லிகைப் பூவிலிருந்து சென்ட் தயாரிக்கும் தொழிற்சாலை அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. க. இராசாராம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.

திரு. சா. ஜெயச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இல்லை என்று சொன்னார்கள். தென்னாற்காடு மாவட்டம் காட்டுமன்னார் கோவில் மிகவும் பின் தங்கிய பகுதி. தமிழகத்தின் பல ஊர் களுக்கும் என் பகுதியிலிருந்துதான் மல்லிகைப்பூ செல்கிறது. முல்லை அரும்பும் செல்கிறது. இந்த மலர்கள் எல்லாம் காடு வெட்டி, சின்னப்புகழேரி, பெரிய புகழேரி, கண்டமங்கலம், வீரவ நல்லூர் போன்ற கிராமங்களிலிருந்தும், என் பகுதியை அடுத் துள்ள பக்கத்து கிராமங்களான இராசப்புலியூர், மீன்சுருட்டி, குடி காடு, பாப்பாகுடி போன்ற கிராமங்களிலிருந்தும், தமிழகத்தின் பல பகுதிகளுக்கும் வந்து கொண்டிருக்கிறது. என்னுடைய தொகுதியைப் பொறுத்தவரையில் அங்கே எந்தத் தொழிற்சாலை